பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 137

சனிக்கிழமை
12 ஏப்ரல் 2025

பங்குனி 29 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

உள்ளாட்சித் தேர்தல்; முறைப்பாடு 1000+ » 03

உலகளாவிய நெருக்கடிகளால்

# தளம்பலடையும் நிலையில் இலங்கைப் பொருளாதாரம்

நாணயநிதியம் எச்சரிக்கை

கொழும்பு, ஏப்ரல். 12

உலகளாவிய ரீதியில் தற்போது ஏற்பட்டு வரும் நெருக்கடிகள் காரணமாக, இலங்கை நிச்சயமற்ற நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளது என்று சர்வதேச நாணயநிதியம் எச்சரித்துள்ளது.

☞ 11

## அமெரிக்க வரிகளிலிருந்து தப்புவதற்கு வியூகங்கள்!

ஜனாதிபதி அநுர தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 12
அமெரிக்காவின் வரிச் சுனாமியில் இருந்து தப்பிப்பதற்குரிய வியூகங்கள் வகுக்கப்பட்டுவருகின்றன. சிலவேளை அதில் சிக்க நேரிட்டால், அதிலிருந்து மீள்வதற்குரிய திட்டங்களும் வகுக்கப்படுகின்றன என்று

☞ 11

தாயகக் கோட்பாட்டை வலுப்படுத்த

## பௌத்த விகாரைகள் அழிக்கப்படுகின்றன!

முன்னாள் அமைச்சர் வீரசேகர தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 12
வடக்கு, கிழக்கில் தாயகக் கோட்பாட்டை நிராகரிப்பதற்கு இருக்கும் ஒரே சாட்சிதான் பௌத்த சின்னங்கள். அதனால்தான் அவற்றை தமிழ் பிரிவினைவாத அரசியல்வாதிகள் அழித்துவருகின்றனர் என்று பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தரான

☞ 11

## ஏப்ரல் 15ஆம் திகதி அரச விடுமுறையல்ல

கொழும்பு, ஏப். 12
எதிர்வரும் 15ஆம் திகதி அரச விடுமுறை தினமென வெளியாகும் தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை என பொதுநிர்வாக அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்தார்.
இது தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-
ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது என்று சில

☞ 11

## ஊழல் விசாரணைகள்; ரணிலுக்கும் அழைப்பு!



கொழும்பு, ஏப். 12
இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் விசாரணைகளுக்காக எதிர்வரும் 17ஆம் திகதி முன்னிலையாகுமாறு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
2016ஆம் ஆண்டில்

☞ 11

## விளையாட்டுப் பயிற்சியாளரால் 16 சிறுவர்கள் துஷ்பிரயோகம்!

கிளிநொச்சி, ஏப். 12
கிளிநொச்சியில் விளையாட்டுப் பயிற்சியாளர் ஒருவர் 16 சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகத்துக்கும், துர்நடத்தைக்கும் உட்படுத்தியுள்ளார் என்பது இதுவரையான விசாரணைகளின் அடிப்படையில் தெரியவந்துள்ளது.
பாடசாலை ஒன்றின் சிற்றூழியராகப் பணியாற்றும் ஒருவர், விளையாட்டுத்துறைப்

☞ 11



படம் ஐ.சிவசாந்தன்

50 வருடங்களுக்குப் பின்னர்

## மாவிட்டபுரம் கந்தனுக்கு மகா கும்பாபிஷேக விழா

யாழ்ப்பாணம், ஏப். 12
வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் ஸ்ரீகந்தசுவாமி ஆலய மகா கும்பாபிஷேகப் பெருவிழா 50 ஆண்டுகளுக்குப் பின்னர் நேற்று வெள்ளிக்கிழமை ஆயிரக்கணக்கான பக்தர்கள் சூழ மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.
காலை 8.07 மணி முதல் முற்பகல் 10.09 மணி வரையுள்ள சுப வேளை

☞ 11

## விபத்தில் மூதாட்டி உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஏப். 12
யாழ்ப்பாணம் திருநெல்வேலிப் பகுதியில் இடம்பெற்ற டிப்பர் விபத்தில், மூதாட்டியொருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார். சரவணபவன் மகேஸ்வரி (வயது–85) என்ற மூதாட்டியே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
வீதியோரமாக நிறுத்தப்பட்டிருந்த டிப்பர், திடீரென பயணித்தபோது, வீதியின் கரையாக நடந்துசென்ற மூதாட்டியை மோதியதுடன் அவர் மீது

☞ 11

## பிரதமர் ஹரிணி அமரசூரிய யாழில் தேர்தல் விதிமீறல்!

யாழ்ப்பாணம், ஏப். 12
பிரதமர் ஹரிணி யாழ்ப்பாணத்தில் நேற்றுத் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டிருந்த நிலையில், அவர் கலந்துகொண்ட சில கூட்டங்கள், தேர்தல் விதிமுறைகளை மீறி இடம்பெற்றன என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

☞ 11



முச்சந்தி முனி



'படிக்கிறது தேவாரம் இடிக்கிறது சிவன்கோயில் எண்டது அவைக்கு பழக்கம் கண்டியளோ'

## மாவிட்டபுரம் கோயிலில் பாதுகாப்புக் கெடுபிடிகள்

யாழ்ப்பாணம், ஏப். 12
பிரதமர் ஹரிணியின் வருகையை முன்னிட்டு, மாவிட்டபுரம் ஸ்ரீகந்தசுவாமி ஆலய வளாகத்தில் நேற்று உச்சகட்டப் பாதுகாப்புக் கெடுபிடிகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.
ஆலய வளாகத்தின் சில இடங்களில், பாதுகாப்புச் சோதனை மையங்கள் அமைக்கப்பட்டு பக்தர்களிடம் சோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. இதற்கு பக்தர்களின் தரப்பால் கடும் எதிர்ப்பும் விமர்சனமும் முன்வைக்கப்பட்டது.
'நாங்கள் பிரதமரைப் பார்க்க வரவில்லை. இது தேசிய மக்கள் சக்தி

☞ 11

## தூய்மையான உள்ளூராட்சிசபைகளை உருவாக்குவதற்காக ஒன்றிணையுங்கள்

காரைநகரில் வைத்து பிரதமர் ஹரிணி அழைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 12
வரவு – செலவுத் திட்டத்திலிருந்து ஒதுக்கப்படும் நிதியை கிராமிய அபிவிருத்திக்காக வெளிப்படைத்தன்மையுடன் பயன்படுத்த தூய்மையான உள்ளூராட்சி மன்றத்தை உருவாக்குவதற்கு முன்வாருங்கள் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய அழைப்பு விடுத்துள்ளார்.
காரைநகரில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இந்த நாடு வளமான கலாசார மரபுகளைக் கொண்ட நாடு,

☞ 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12.04.2025 சனிக்கிழமை

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 11.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4045 |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கங்கள் | 06 30 39 78 |
| விசே எழுத்து | O |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 11.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1112 |
| வெற்றி இலக்கினம் | விருச்சிகம் |
| வெற்றி இலக்கங்கள் | 02 46 55 61 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 11.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0071 |
| ஆங்கில எழுத்து | L |
| வெற்றி இலக்கங்கள் | 1 0 1 8 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 11.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2151 |
| ஆங்கில எழுத்து | R |
| சுப்பர் இலக்கம் | 19 |
| வெற்றி இலக்கங்கள் | 12 33 36 69 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 11.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5803 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கங்கள் | 8 8 6 1 7 0 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 11.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1833 |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கங்கள் | 06 17 21 30 |
| விசேட எழுத்து | W |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 11.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0378 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கங்கள் | 6 1 7 ·0 |

# பட்டலந்தவுக்குத் தண்டித்திருந்தால் இறுதிப் போர்க்குற்றங்கள் நடந்திருக்காது

## சத்தியலிங்கம் எம்.பி. சுட்டிக்காட்டு



**கொழும்பு, ஏப்.12**

**பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால், பயத்தில் இறுதிக்கட்டப் போரின்போது மனித குலத்துக்கு எதிரான செயற்பாடுகள் மற்றும் போர்க்குற்றங்களில் ஈடுபட்டிருக்கமாட்டார்கள் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.**

பட்டலந்த வதைமுகாம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பட்டலந்த அறிக்கை தொடர்பில் விவாதம் நடத்துவதுடன் மட்டும் நின்றுவிடக்கூடாது. குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக முறையான விசாரணை நடத்தப்பட்டு, குற்றவாளிகள் சட்டத்தின்முன் நிறுத்தப்பட்டு பொறுப்புக்கூற வைக்கவேண்டும். அப்போதுதான் இப்படியான குற்றங்கள் மீள் நிகழலாமல் இருக்கும்.

இறுதிக்கப்பட்டபோரின்போது இதேமாதிரியான, மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், நீதிக்குப் புறம்பான கொலைகள், காணாமல் ஆக்கப்படுதல், உறவுகளால் கையளிக்கப்பட்டவர்கள் வீடு திரும்பாமை, போர்க்குற்றங்கள் உட்படப் பல விடயங்கள் தொடர்பிலும் அறிகைகள் உள்ளன. இவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு முற்படும் வேளை நாட்டுக்காக போராடியவர்கள் காட்டிக்கொடுக்கப்படுகின்றனர் என இங்குள்ள அரசியல்வாதிகள் கூறுகின்றனர்.

அறிக்கைகளை முன்வைத்து பயனில்லை. உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் - என்றார். (எ-44)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 11.04.2025 | சனிக்கிழமை | 0511 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| M | 7 0 9 8 3 3 | |

| Super Ball DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 11.04.2025 | சனிக்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2777 | A | 22 45 54 76 |

| சனிதா DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 11.04.2025 | சனிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| T | 15 17 50 77 | 4938 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | தினம் |
| 11.04.2025 | சனிக்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0662 | 11 21 27 |

| லக்ன ராசி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 11.04.2025 | சனிக்கிழமை | |
| மேஷம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| ♈ | 02 07 53 60 | 4489 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 11.04.2025 | சனிக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| L | 38 | 38 60 63 66 | 1953 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 11.04.2025 | சனிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| I | 11 24 31 43 | 2603 |

# ஜே.ஆர். போன்று ரணிலும் அதிகாரத் துஷ்பிரயோகம்

## அமைச்சர் சமந்த தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.12

ஜே.ஆர்.ஜெயவர்த்தன அதிகாரத்தை முறையற்ற வகையில் பயன்படுத்தியதைப் போன்றே அவரது மருமகனான ரணில் விக்கிரமசிங்கவும் அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தினார். அதன் பெறுபேறே பட்டலந்த சித்திரவதை முகாமாகும்.

இவ்வாறு பெருந்தோட்டத்துறை அபிவிருத்தி மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்துள்ளார். பட்டலந்த வதை முகாம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

1988 மற்றும் 1989 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற சம்பவங்களை எமது கணக்கில் வைப்பிலிடுவதற்கு ரணில் விக்கிரமசிங்க முயற்சிக்கிறார். எவரையும் பழிவாங்க வேண்டிய தேவை அரசாங்கத்துக்குக் கிடையாது. உண்மை நிச்சயம் வெளிவரும். சட்டத்தின்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

பட்டலந்த சித்திரவதை முகாமில் பல்கலைக்கழக மாணவர்கள், சட்டத்தரணிகள், தொழிற்சங்கவாதிகள் உட்பட பலர் படுகொலை செய்யப்பட்டனர். இது வெறும் அறிக்கையல்ல, இலங்கையின் ஹிட்லர் தொடர்பாக இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த சித்திரவதை முகாமைப் போன்று நாடுமுழுவதும் அரச ஆதரவுடன் பல சித்திரவதை முகாம்கள் காணப்பட்டன. ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் சித்திரவதை முகாம்களுக்குத் தலைமை தாங்கினார்கள். பட்டலந்த விசாரணை அறிக்கை சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. முறையான சட்டநடவடிக்கைகள் எடுக்கப்படும். பட்டலந்த விவகாரத்தை மக்கள் விடுதலை முன்னணி மீது திருப்ப ரணில் மேற்கொண்ட முயற்சிகள் அவருக்கு எதிராகத் திரும்பியுள்ளது - என்றார். (எ-இ)

# புத்தாண்டு நிகழ்வுகளை படம்காட்டவேண்டாம்!

## ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.12

கடந்த ஆண்டுகளைப் போன்று, இந்தாண்டு ஜனாதிபதியின் புத்தாண்டுச் சடங்கு நிகழ்வுகளை தொலைக்காட்சிகளில் நேரடியாக ஒளிபரப்புச் செய்யவேண்டாம் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அறிவித்துள்ளார்.

தான் எவ்வாறு புத்தாண்டு கொண்டாடுகிறேன் என்பதனை படம் போட்டு காண்பிப்பதில் எவ்விதப் பிரயோசனமும் இல்லை. சடங்குகளை சரியான முறையில் செய்வதே கட்டாயமாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)



# ‘க்ளீன் ஸ்ரீலங்கா’ திட்டத்தின்கீழ் 34 புதிய திட்டங்கள் அறிமுகம்!

கொழும்பு, ஏப்.12

அரசாங்கத்தின் பிரதான திட்டமாகச் செயற்படுத்தப்படும் ‘க்ளீன் ஸ்ரீலங்கா’ திட்டத்தின் கீழ், இந்த ஆண்டு 34 புதிய திட்டங்களை செயற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளன.

இது தொடர்பான ஆலோசனைகளை வழங்குவதற்கான ஒரு நாள் செயலமர்வு அலரிமாளிகையில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

குறித்த திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அனுமதியைப் பெற்ற பின்னர், உரிய வகையில் ஒரு செயற்றிட்டத்தைத் தயாரிப்பது தொடர்பாகவும் அதற்கமைய துரிதமாக ஆரம்பிக்கவேண்டிய திட்டங்களை இம்மாத இறுதிக்குள் ஆரம்பிப்பது குறித்தும் இதன்போது ஆராயப்பட்டுள்ளது.

இதேவேளை நாட்டில் சமூக, சுற்றுச்சூழல் மற்றும் நெறிமுறை விழிப்புணர்வை உருவாக்கி சமூகத்தை உயர்ந்த நிலைக்கு உயர்த்தும் நோக்கில், அனைத்துத் தரப்பினரின் பங்களிப்புடன் நாடளாவிய ரீதியாகச் செயற்படுத்தப்படவுள்ள ‘க்ளீன் ஸ்ரீலங்கா’ திட்டத்துக்கு இந்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் 5 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் துஷ்பிரயோகங்கள் 40,000 வழக்குகள் நிலுவை

**கொழும்பு, ஏப்.12**

**சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக சுமார் 40 ஆயிரம் வழக்குகள் நிலுவையில் உள்ளன என்றும் பல ஆண்டுகளாக சில வழக்குகளுக் கான தீர்ப்பு வழங்கப்படும் செயற்பாடுகள் தாம தமாகி வருவதால் சிக்கல் ஏற்பட்டுள்ளது என்றும் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு தெரி வித்துள்ளது.**



சிறுவர் துஷ்பிரயோகம் தொடர் பான வழக்குகளின் விசார ணைகளைத் துரிதப்படுத்துவ தற்கான திட்டம் தயாரிக்கப்பட வுள்ளது. சிறு வர் துஷ்பிரயோ கம் தொடர்பான வழக்குகளில் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு நீதி கிடைப்பதை உறுதி செய்வ தற்காக குற்றஞ்சாட்டப்பட்ட வர்கள் மீது உடனடியாக குற் றச்சாட்டுகள் பதிவுசெய்யப்பட வேண்டும். குற்றப்பத்திரிகை தாக்கல்செய்வதை விரைவு படுத்த சட்டமாஅதிபர் திணைக்க ளத்தின் உதவியைப் பெறுவதற் கான திட்டங்களும் முன்னெடுக் கப்பட்டுவருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## முதியோர் கொடுப்பனவு விநியோகம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப்.12

தென்மராட்சிப் பிரதேச முதியோர்களுக் கான ஏப்ரல் மாதக் கொடுப்பனவு 5 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டு நேற்றுத் தொடக்கம் விநியோகிக்கப்படு மென அறிவிக்கப்பட்டுள்ளது.

புதுவருடத்தை முன்னிட்டு அதிகரித்த கொடுப்பனவு அந்தந்த அஞ்சல் அலு வலகங்களில் விநியோகிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை கால மும் முதியோர் கொடுப்பனவு மாதாந் தம் தலா 3 ஆயிரம் ரூபாவாக வழங்கப் பட்டு வந்ததை குறிப்பிடத்தக்கது. (ச-9)

## உள்ளூராட்சித் தேர்தல் முறைப்பாடுகள் 1000+

கொழும்பு, ஏப்.12

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக தேசிய தேர் தல் ஆணைக்குழுக்களில் அளிக்கப்பட்டுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை ஆயிரத்தைத் தாண்டியுள்ளது.

கடந்த மார்ச் 20ஆம் திகதி முதல் தேசிய தேர்தல் முறைப்பாடுகள் மையம் மற்றும் மாவட்டத் தேர் தல் முறைப்பாட்டு மையங்களில் மொத்தம் ஆயிரத்து 46 முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட் டுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரி வித்துள்ளது. உள்ளாட்சித் தேர்தல் எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)



# பேருந்து முன்பதிவு இடைநிறுத்தம்!

கொழும்பு, ஏப்.12

எதிர்வரும் 21ஆம் திகதி வரை முன்பதிவு நடவடிக்கை இடைநிறுத் தப்படவுள்ளது என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரி வித்துள்ளது. பஸ் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவ தால் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது. (ச-இ)

## 24 மணிநேர சேவை 3 நாள்கள் இல்லை

கொழும்பு, ஏப்.12

ஒருநாள் சேவையில் கடவுச்சீட்டு பெற்றுக்கொள்வதற்காக 24 மணிநேர சேவை மூன்று தினங்களுக்கு நிறுத்தப்பட்டுள்ள தாக குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் தெரிவித் துள்ளது. அதன்படி எதிர்வரும் 15, 16, 17 ஆம் திகதிகளிலேயே இந்தச் சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

மேலும் ஒரு நாள் மற்றும் வழமையான சேவைகளை வழங் குவதற்கான துண்டுச் சீட்டுகள் குறித்த நாள்களில் நண்பகல் 12 மணிவரை வழங்கப்படும் என்று குடிவரவு மற்றும் குடிய கல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)

## சில சேவைகளுக்கு வற்வரி நீக்கம்

கொழும்பு, ஏப். 12

பணியாளர் போக்குவரத்து மற் றும் இலவச உணவு வழங்க லில் விதிக்கப்பட்ட வற் வரி நீக் கப்பட்டுத் திருத்தங்கள் கொண் டுவரப்பட்டுள்ளதாக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சர் கலாநிதி ஹர்ஷண சூரியப்பெரும நாடா ளுமன்றத்தில் தெரிவித்துள் ளார்.

சேவை வழங்குநர் தனது பணி யாளர்களுக்கு இலவசமாக வழங்கும் உணவு மற்றும் போக் குவரத்து வசதிகளுக்கு வரி விதிக்கப்படவேண்டும் என சட் டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. தொழிற்சாலைகள் இது குறித்து அரசுடன் விவாதித்ததையடுத்து இந்தச் சேவைகளுக்கு விதிக்கப் பட்ட வற்வரியை நாங்கள் நீக்கி யுள்ளோம் என்றும் அவர் தெரி வித்தார். (ச-இ)




**காகத்துக்கு கனவிலயும் குப்பையைக் கிளறுறதுதான் எண்ணமா இருக்குமாம். அதைமாதிரி சிலருக்கு உப்பிடியான குப்பைவேலையளை எப்ப செய்யலாம் எண்டதுதான் யோசினையா இருக்கும். இப்ப சண்டை முடிஞ்சு, ஆட்சியளும் மாறினதால முந்தினமாதிரி தமிழ் ஆக்களோட, சிங்கள இனவாதியள் சொறிச் சேட்டையள் பெரிசா விடேலாமாக் கிடக்கு. ஆனாலும் ஆடின காலும், பாடின வாயும் சும்மா இருக்காது தானே. அதாலா என்னவிதப்பட்டும் தங்கட சேட்டை யளை இஞ்ச காட்டுறதில சிலர் குறியா இருக்கினம்.**

**வெளிநாட்டில இருந்து யாழ்ப்பாணத்துக்கு இப்ப வெளிநாட்டுக்காரர் நிறையப்பேர் வருகினம். அவையள இஞ்ச உள்ள முக்கியமான இடங்களுக்கு கூட்டிக்கொண்டுபோய், அந்த இடங்களின்ர பெருமை, அதிசயம் எல்லாத்தையும் விளங்கப்படுத்த சுற்றுலா வழிகாட்டிமார் இருக்கினம். அந்தச் சுற்றுலா வழிகாட் டியள் ரண்டு வகை. நாடு முழுக்க சுத்திக்காட்டுற வையை 'தேசிய சுற்றுலா வழிகாட்டி ' எண்டுவினம். குறிப்பிட்ட ஒரு ஏரியாவை மட்டும் சுத்திக்காட்டி விளங்கப்படுத்துறவையை 'பிராந்திய சுற்றுலா வழிகாட்டி' எண்டுவினம். இந்தப் பிராந்திய சுற்றுலா வழிகாட்டியள், தங்களுக்கெண்டு ஒதுக்கப்பட்ட பகுதி யளை மட்டும்தான் காட்டலாம். நாடுமுழுக்கக் காட்டேலாது. அதாலதேசிய சுற்றுலா வழிகாட்டியளுக்கு கீழதான் இவையள். நாங்கள்தான் பெரிய ஆக்கள் எண்டகெப்பர்குணம்தேசியசுற்றுலாவழிகாட்டியளிட்ட கனக்க இருக்கு.**

**இப்ப பிராந்திய சுற்றுலா வழிகாட்டியளுக்கு சான்ஸ் குடுக்காமல்,தேசிய சுற்றுலா வழிகாட்டியளே இஞ் சையும் வெளிநாட்டுக்காரரோட வந்து இடங்களைப் பற்றி அவைக்கு விளங்கப்படுத்துகினமாம். அப்பிடி விளங்கப்படுத்தேக்கதான் சொறிவிளையாட்டுகள் காட்டுகினமாம்.**

**"இதுதான் நிலாவரை. இதின்ர தண்ணி எப்பவும் வத்தாது. இதின்ர நீரூற்று அநுராதபுரம் தூபராம விகாரையில இருந்து வருகுது."**

**"இதுதான் யாழ்ப்பாண நூலகம், புலியள்தான் இதை எரிச்சவை."**

**"யாழ்ப்பாணத்தில உள்ள பெரிய கோயில்தான் இந்த நல்லூர். இது முந்தி விகாரையா இருந்தது. பிறகு தமிழ் ஆக்கள் அதை கோயிலா மாத்திப்போட்டினம்" இப்பிடி இஞ்ச உள்ள வரலாற்று முக்கியத்துவமான இடங்களை எல்லாம், தங்கட சிங்கள ஏரியாக்களோட தொடர்பு படுத்தி பிழை பிழையா வரலாற்றை மாத்திச் சொல் லுகினம். உதைப் பார்த்திட்டுப் போன சுற்றுலாக்காரர் தங்கட நாட்டில போய் என்ன சொல்லுவினம்.. "விகா ரையை இடிச்சுத்தான் நல்லூர் கட்டினது. நிலா வரைக்கு அநுராதபுரம் விகாரையில இருந்துதான் தண்ணி வருகுது" எண்டுதானே சொல்லப்பாப்பினம். அப்பிடிச் சொல்லச் சொல்ல அதுவே பிறகு உண்மை யாகி, நாங்கள் சொல்றதெல்லாம் பொய்யெண்டு ஆகி டும். இப்பிடி வரலாற்றை மாத்துறவேலையோட இன்னொண்டையும் உந்தத் தேசிய சுற்றுலா வழிகாட்டியள் செய்யினம். வெளிநாட்டுக்காரர் வந்து "நாங்கள் வடமராட்சி போகவேணும்" எண்டு கேட் டால், "அங்க ஒண்டுமில்லை, இப்ப வெக்கைக்குள்ள போனால் காய்ச்சலிலதான் படுக்கோணும்" எண்டு சொல்லி மறிக்கினம். ஏனெண்டால் வடமராட்சிக்குப் போனால் தலைவரின்ர வீடு காட்டவேணும், போராட் டத்தோட சம்பந்தப்பட்ட இன்னும் கன இடங்களுக்கும் போகவேண்டி இருக்கும். அதாலதான் இப்பிடி மறிக்கி னமாம். கடைசியா சுற்றுலாத்துறையை வைச்சுக்கூட எங்களுக்கு எதிரான வேலையளை எப்பிடிச் செய் யினம் எண்டு பாத்தியளோ?**

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். சிலருக்கு அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். மாலையில் உற்சாகமாகக் காணப்படுவீர்கள். புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்.

**இடபம்:** மகிழ்ச்சியான நாள். புதிய முயற்சிகள் எதுவும் வேண்டாம். கோயில்களைத் தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படக்கூடும். அலுவலகத்தில் சக ஊழியர்கள் அனுசரணையாக இருப்பார்கள். வியாபாரம் வழக்கம் போலவே நடைபெறும்.

**மிதுனம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக இருக்கும். மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவம் நடைபெறும். உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும். எதிர்பாராத செலவுகள் ஏற்படும்.

**கடகம்:** தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகமாக இருப்பீர்கள். ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும். பணிச்சுமை குறையும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டா கும். சிலருக்கு நவீன டிசைனில் ஆடை வாங்கும் வாய்ப்பு ஏற்படும். உங்கள் தேவையறிந்து நண்பர் செய்யும் உதவி மகிழ்ச்சி தரும்.

**கன்னி:** குடும்பம் அல்லது வேலை தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதை இன்றைக்குத் தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத செலவுகள் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சிலர் கடன் வாங்கவும் நேரிடும். மற்றவர்களிடம் பேசும்போது நிதானம் அவசியம்.

**துலாம்:** எதிலும் நிதானமாகச் செயற்படவும். பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். வீண்விவாதம் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம்.

**விருச்சிகம்:** காரியங்கள் அனுகூலமாகும் நாள். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகம் உண்டாகும். ஆதாயம் உண்டாகும். புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்குவீர்கள்.

**தனுசு:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் சென்று வரும் வாய்ப்பு ஏற்படும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் மறையும். நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள்.

**மகரம்:** உறவினர்கள் வருகையால் திடீர்ச் செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்து விடுவீர்கள். உணவு விடயத்தில் கவனம் தேவை. உடல் ஆரோக்கியம் மேம்படும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கும்பம்:** காரியங்கள் வெற்றிகரமாக முடியும் நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உடல் நலனில் கவனம் தேவை. சிலருக்கு எதிர்பாராத செலவுகளுடன் தேவையற்ற அலைச்சலும் ஏற்படக்கூடும்.

**மீனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். புதிய முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். வாழ்க்கைத் துணையால் ஆதாயம் உண்டாகும், பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.



# சென்னை சூப்பர் கிங்ஸ் வெட்கக்கேடான தோல்வி

**ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், சொந்த மைதானத்தில் மிகவும் மோசமான வகையில் படுதோல்வியடைந்தது சென்னை சூப்பர் கிங்ஸ்.**

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொல்கத்தா அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. சென்னை அணியின் எந்தவொரு வீரரிடமும் பொறுப்புணர்வோ அல்லது தாக்கம் செலுத்தும் முனைப்போ இருக்கவில்லை. டெஸ்ட் ஆட்டங்கள்கூட எவ்வளவோ பரவாயில்லை என்றுகூறும் வகையில் அமைந்தது சென்னையின் இன்னிங்ஸ்.

ஆரம்ப வீரர்களான ரச்சின் ரவீந்திரா, கொன்வே இருவரும் முறையே 4 ஓட்டங்களுடனும், 12 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். திரிபாதி 16 ஓட்டங்களைப் பெற்றார். இதற்காக அவர் 22 பந்துகளை எதிர்கொண்டார். 21பந்துகளில் 29 ஓட்டங்களைக் குவித்த விஜய் சங்கரின் இன்னிங்ஸ்தான், சென்னையின் சார்பில் பதிவான அதிரடி இன்னிங்ஸாக அமைந்தது. டுபே 29 பந்துகளில் 31ஓட்டங்களைப் பெற்றார். அஸ்வின் 1, ஜடேஜா 0, கூடா 0, டோனி 1என அடுத்தடுத்து ஆட்டமிழக்க முடிவில் 9 விக்கெட்களை இழந்து 103 ஓட்டங்களைப் பெற்றது சென்னை.

பந்துவீச்சில் நரைன் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய கொல்கத்தா அணிக்கு ஆரம்ப வீரர்களான நரைனும், குயின்டன் டி ஹொக்கும் எவ்வளவு வேகமாக ஆட்டத்தை முடிக்க முடியுமோ அவ்வளவு வேகமாக முடிப்பதற்கு எத்தனித்தனர். நான்கு ஓவர்களில் அணி 46 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் குயின்டன். சுனில் நரைன் 18 பந்துகளில் 44 ஓட்டங்களை விளாசினார். அணித்தலைவர் ரகானே மற்றும் ரிங்கு சிங் இருவரும் இணைந்து ஆட்டத்தை வெற்றியுடன் முடித்துவைத்தனர். வெறும் 10.1 ஓவர்களில் 107 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது கொல்கத்தா.

ஐ.பி.எல். வரலாற்றில் சென்னை அணிக்கு எதிராக, மிகக் குறைந்த ஓவர்களில் பெறப்பட்ட வெற்றி இதுவாகும். (ம)










## கலைமுகம் இதழ் வெளியீடு

யாழ்ப்பாணம், ஏப்.12

திருமறைக்கலாமன்றத்தால் வெளியிடப்படும் 'கலைமுகம்' கலை இலக்கிய சமூக இதழின் 79 ஆவது இதழ் வெளிவந்துள்ளது. வழமைபோல் கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், நூல் மதிப்பீடுகள், பத்தி உட்பட பல்வேறு விடயங்களையும் தாங்கி இந்த இதழ் வெளிவந்துள்ளது. (ச-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

வாழ்க்கை எப்போதுமே செயற்படுவதற்கான சரியான தருணத்திற்காக காத்திருக்கும் ஒரு விடயம்.

–பிடல் காஸ்ட்ரோ–

# கருத்துகள் செயலுருப்பெற வேண்டும்!

காணாமலாக்கப்பட்ட உறவுகளைத் தேடும் தமிழ்த் தாய்மார்களின் துன்பம் மிகக் கொடியது. அதை நாங்கள் நன்றாகவே உணர்வோம். எனவே, கடந்த காலத் தவறுகளை ஏற்று அதற்காக மன்னிப்புக்கோரி குற்றமிழைத்தவர்களைத் தண்டித்து, தொடர்ந்து முன்னேறுவோம் என்று வெளிப்படையாக அறிவித்திருக்கின்றார் சபை முதல்வரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க. ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தில், 'பட்டலந்த' வதைமுகாம் தொடர்பான விவாதம் தற்போது இடம்பெற்றுவருகின்றது. ஆதலால், பட்டலந்த வதைமுகாம் தொடர்பில் விசாரிக்கப்படுவதைப் போன்று, வடக்கு - கிழக்கில் இடம்பெற்ற மனிதப் படுகொலைகள் தொடர்பிலும் விசாரிக்கப்படுமா? என்ற கேள்வி தமிழர் பகுதிகளில் பரவலாக எழுந்துள்ள நிலையிலேயே, இந்தக் கருத்துகளும் -அரசின் நிலைப்பாடும் அமைச்சர் பிமலிடம் இருந்து வெளிப்பட்டிருக்கின்றன.

அமைச்சர் பிமல் மட்டுமல்ல, பிரதமர் ஹரிணிகூட சமீபத்தில் உரையாற்றும்போது, மீளநிகழாமை உறுதிப்படுத்தப்படவேண்டியதன் அவசியத்தை வலுவாகப் பதிவுசெய்திருந்தார். அத்துடன், இலங்கை அரசாங்கத்தால், காணாமலாக்கப்பட்டவர்களின் விவகாரங்களைக் கையாள்வதற்கென அமைக்கப்பட்டுள்ள உண்மைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழுவை பிரச்சினைகளுக்கான தீர்வாகவல்ல, மாறாக அந்தத் தீர்வுக்கான ஆரம்பப் புள்ளியாக ஏற்கக்கூட தமிழர்கள் தயாரில்லை என்பதையும், அந்த ஆணைக்குழுக்கள் 'தோல்வியடைந்த முயற்சிகள்' என்பதையும் பிரதமர் பகிரங்கமாக ஒப்புக் கொண்டிருந்தார்.

அமைச்சர் பிமல் ரத்நாயக்கவும், பிரதமர் ஹரிணியும் சாதாரணமானவர்கள் அல்லர். அமைச்சர் குழுவிலும் கொள்கை வகுப்பாளர்களாக இருப்பவர்கள். ஆதலால், அவர்கள் இருவரும் 'மீள நிகழாமையை உறுதிப்படுத்த வேண்டும்' என்றும், 'கடந்த காலத் தவறுகளை உணர்ந்து அதற்கான மன்னிப்புக்கோரி முன்னேறவேண்டும்' என்றும் கூறியிருக்கும் கருத்துகள் மிகவும் ஆரோக்கியமானவை. கடந்த கால அரசாங்கங்கள், இனப்பிரச்சினையைத் தீர்ப்பாகக் கூறிக்கொண்டு மேற்கொண்ட முன்னெடுப்புகளில் என்னென்ன விடயங்களையெல்லாம் வெற்றிடமாக விட்டுவிட்டு நகர்ந்தனவோ, அந்த வெற்றிடங்களையெல்லாம் நிரப்பும் -சரிசெய்யும் கருத்துகளைத்தான் அநுர அரசு வெளிப்படுத்தியிருக்கின்றது. 'இந்த விடயங்களையெல்லாம் செய்வார்களா?' என்ற கேள்விகளுக்கு அப்பால், அவர்கள் இவற்றை உணர்ந்திருக்கின்றார்கள் என்பதே பெரும் ஆறுதல்தான்.

இலங்கையில் உள்ள இனப்பிரச்சினை, தென்னாபிரிக்காவைப்பின்பற்றி அமைக்கப்படும் பொறிமுறைகளால் தீர்க்கப்படும் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் பலமுறை கூறியிருந்தார். 'உண்மைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழுவை' அமைத்ததால் தென்னாபிரிக்கா இனத்துவேசங்களையும் நிறத்துவேசங்களையும் களையவில்லை. எல்லாவற்றுக்கும் முதல் அது பாதிக்கப்பட்டவர்களின் காயங்களை ஆற்றுப்படுத்தியது. இலங்கை இவ்வளவு காலமும் செய்ய மறுக்கும் கருமமும் இதுவே. ஆதலால், தேசிய மக்கள் சக்தியினரின் கருத்துக்கள் வரவேற்கப்படவேண்டியவை: அந்தக் கருத்துகள் செயலுருப்பெறவேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு.




# போக்குவரத்து மீறல்களுக்கு இனி ஒன்லைனில் தண்டம் செலுத்தலாம்

கொழும்பு, ஏப்.12

**போக்குவரத்து விதிமீறல்களுக்காக பொலிஸாரினால் விதிக்கப்படும் தண்டப் பணத்தைச் சாரதிகள் இணையம் மூலமாக செலுத்துவதற்கான முன்னோடி செயற்றிட்டமொன்றை அறிமுகப்படுத்த இலங்கைப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.**

அதன்படி அரசாங்கம் அறிமுகப்படுத்திய GovPay செயலி மூலம் தண்டப்பணத்தைச் செலுத்தமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் குருநாகல் முதல் அனுராதபுரம் வரையிலான வீதியில் 11 இடங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

GovPay வசதி பெப்ரவரி 7ஆம் திகதி அறிமுகப்படுத்தப்பட்டது. இது பொதுமக்களுக்கு அனைத்து அரசாங்கக் கட்டணங்களையும் டிஜிற்றல் முறையில் செலுத்த உதவும் நோக்கில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-சி)



# மேர்வினுக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு. ஏப்.12

கிரிபத்கொடைப் பிரதேசத்திலுள்ள காணி ஒன்றுக்கு போலி ஆவணங்களைத் தயாரித்து பணமோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா உள்ளிட்ட நால்வரை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு மஹர நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா உள்ளிட்ட நால்வரும் கடந்த புதன்கிழமை நீதிமன்றில் முற்படுத்தப் பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ச-33)

# கட்டுநாயக்கவில் துப்பாக்கியுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஏப்.12

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் புறப்படும் முனையத்தில் துப்பாக்கி, அதற்கான 12 தோட்டாக்கள், மகஸின் என்பவற்றைஆடைக்குள்மறைத்து வைத்திருந்த ஒருவரை கட்டுநாயக்க விமான நிலையப் பொலிஸார் நேற்றுமுன்தினம் கைதுசெய்துள்ளனர்.

இரத்மலானை, காலி வீதியில் வசிக்கும் 41 வயதான வர்த்தகர் ஒருவரே இவ்வாறு ஆயுதங்களுடன் கைதுசெய்யப்பட்டவராவார்.

ஆடைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த கைத்துப்பாக்கி வெளியே தெரிந்ததையடுத்து விமான நிலையப் பொலிஸார் அவரைக் கைது செய்துள்ளனர். (ச-சி)

# கிளிநொச்சியில் 3தேர்தல் விதிமீறல்

கிளிநொச்சி, ஏப்.12

கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை தேர்தல் விதிமுறைகளை மீறியதாகத் தெரிவித்து மூன்று முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

இதுதொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி மாவட்டத் தேர்தல் திணைக்களம் முன்னெடுத்துள்ளது. (ச-125)

# போலி நாணயத்தாளுடன் பெண்ணொருவர் கைது

கொழும்பு, ஏப். 12

மஹரகமப் பகுதியில் 5000 ரூபா போலி நாணயத்தாள்களுடன் பெண் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தப் பெண் மஹரகமப் பகுதியில் 5000 ரூபா நாணயத்தாள்களைப் பயன்படுத்தி கடைகளில் பொருள்களைக் கொள்வனவுசெய்து வந்துள்ளார். ஒரே கடையில் அவர் இரு 5000 ரூபா நாணயத்தாள்களைக் கொடுத்தபோது, அந்த இரண்டு நாணயத்தாள்களிலும் ஒரே இலக்கம் அச்சிடப்பட்டதை வர்த்தகர்கள் அவதானித்து, பொலிஸூக்குத் தகவல் கொடுத்தனர். அதனடிப்படையில் அந்தப் பெண் கைதுசெய்யப்பட்டு, விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (ச-சி)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம்
23 . 04 . 1945



மறைவு
10 . 04 . 2025

**கந்தசாமி பாலசறோசா**

அல்வாய் வடக்கை பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாயை வதிவிடமாகவும் காங்கேசன்துறையை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி பாலசறோசா அவர்கள் நேற்று முன்தினம் (10.04.2025) வியாழக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா-பொன்னம்மா தம்பதியின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தசாமியின் அன்பு மனைவியும் மற்றும் லக்சுமிசாந்தி, சசிகுமார் (லண்டன்), ஜெயக்குமார் (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மனோகரன், கயல்விழி, சயந்தா ஆகியோரின் அன்பு மாமியாரும், வஜீபன், நித்திகா, விதுனன், நிவேனிகா, சஞ்சிகா, ருகி (லண்டன்), ருக்ஷா (லண்டன்), ருபிகன் (லண்டன்), சகிர்ஸ், தனுஸ்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (13.04.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்.உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.

# வடக்கு மக்களின் உணர்ச்சிகளோடு விளையாடுகின்றது அரசாங்கம்

## உருகுகிறார் நாமல்

**கொழும்பு, ஏப்.12**

**வடக்கு மக்களின் உணர்ச்சிகளுடன் விளையாடுவதை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நிறுத்தவேண்டும் எனப் பொதுஜன பெரமுனக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

தனது உத்தியோக பூர்வ எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த பதிவில் அவர் மேலும் தெரிவித்துள் ளதாவது

கடும் கட்டுப்பாடுகளுடன் யாழ்ப்பாணத்தில் பலாலி சாலையைத் திறக்க அரசாங்கம் எடுத்த நடவடிக்கை உண்மையிலேயே கவலையளிக்கிறது.

பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் காரணமாக சாலை மூடப்பட்டிருந்தா லும், எந்தவொரு பாதுகாப்புச் சரிபார்ப்பையும் பெறாமல் அரசாங்கம் அதை மீண்டும் திறந்துள் ளது என்பது தெளிவாகத் தெரிகிறது. எனவே தான் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள் ளன.

அனைத்து அச்சுறுத்தல்களையும் புறக்கணித்து தேர்தலுக்கு முன்பு வாக்குகளைப் பெறுவதற்கான மற்றொரு நடவடிக்கையாக இது காணப்படுகின்றது.

மேலோட்டமான விடயங்களைச் செய்வதன் மூலம் மக்களைத் தவறாக வழிநடத்த வேண்டாம்.

சாலை திறக்கப்பட வேண்டுமானால், அது முழுமையான பாதுகாப்புச் சரிபார்ப்புகளுக்குப் பிறகு செய்யப்படவேண்டும், பொதுமக்களின் பாதுகாப்பை மனதில் கொண்டு அனைத்துத் தடைகளும் இல்லாமல் திறக்கப்படவேண்டும் - என்றார்.

(ச-இ)

**விற்பனைக்கு**

வெளிநாட்டிலிருந்து பொருட்கள் கொண்டுவர பயன்படுத்தப்பட்ட பெட்டி பலகைகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 021 222 6627

**விற்பனைக்கு**


தனங்களப்பு - மன்னார் வீதியில் அமைந்துள்ள சகல வசதியும் கொண்ட வீடு மற்றும் காய்க்கும் தென்னைகள் நிறைந்த 60 பரப்பு தென்னந்தோட்டம் விற்பனைக்கு.
பகுதி பகுதியாகவும் விற்கப்படும்.
விலைபேசித் தீர்மானிக்கலாம்

தொடர்பு:- 0094 77 425 3573

(CR/0020) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
24 . 01 . 1940



மறைவு
08 . 04 . 2025

**அமரர் இராமலிங்கம் நாகம்மா**

கைதடி வடக்கினைப் பிறப்பிடமாகவும் நல்லூரினை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராமலிங்கம் நாகம்மா அவர்கள் கடந்த (08.04.2025) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு-ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னப்பு மாணிக்கம் தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற இராமலிங்கத்தின் (நெசல்ஸ்) பாசமிகு மனைவியும் றோகினி காலஞ்சென்ற அசோக்குமார், மற்றும் நந்தகுமார் சுபாஜினி (பிரான்ஸ்), மாலினி (சிரேஸ்ட கலாசார உத்தியோகத்தர் மாவட்ட செயலகம் கிளிநொச்சி) இதயகுமார் (கனடா), வினோதகுமார் (பொலிஸ் திணைக்களம் யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் குமாரச்சந்திரன் ஞானகாந்தி, ராதா, சிவகுமார் (பிரான்ஸ்), கிருஷ்ணானந்தன் (ஆசிரியர் யா/ நல்லூர் மங்கயக்கரசி வித்தியாலயம்) அருனா (கனடா) நிந்துஜா (கமநல சேவைகள் திணைக்களம் யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் செல்லம்மா, இராசலட்சுமி, இராசசுந்தரம் மற்றும் பாலசுந்தரம் (கனடா), அன்னம்மா (மணி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, கந்தசாமி மற்றும் சிவயோகம், பத்மினி, ஜீவமணி (கனடா), காலஞ்சென்றவர்களான யோகலிங்கம் கனகலிங்கம், துரைசிங்கம், துரைராஜா, பாலசிங்கம், ஜெயராஜா மற்றும் கமலாதேவி (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனியும் தேனுகா, நுகல்யா, திவ்வியா, அஜந்தன், பர்சிகா, இந்துரன், மயூரன், மாதவன் பிரியங்கா, துவாரகன் (பிரான்ஸ்) ஆர்த்திகன் அபிநயன், அனோஜிதன், சப்தவி, விபுஷவி (கனடா), தஸ்வீன், கவீசன், ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் அனுஷா, டிக்சனா, அக்ஷா, ஜானு, ஜீவித், நிவின், அஜய், அகில்ஜா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.04.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கைதடி வடக்கு தச்சன்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


"பழமுதிர்ச்சோலை
கைதடி வடக்கு
கைதடி

தகவல்: குடும்பத்தினர்.
077 718 9060

(CS/57950) V-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
22 04 1956



மறைவு
10 04 2025

**கந்தையா சந்திரகுமார்**

( தேசிய நீர்வழங்கல் வடிகால்அமைப்புச்சபை ஓய்வு பெற்ற சாரதி )

மடத்தடி சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் குட்டியப்புலம் வயாவிளானை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சந்திரகுமார் நேற்று முன்தினம் (10.04.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா (ஜோன்) - மாணிக்கம் (பேத்தி) தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற மார்க்கண்டு மற்றும் - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், அமிர்தலீலா அவர்களின் அன்புக் கணவரும், சிவாகரன் (பிரான்ஸ்), ராஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும், கோசலா (பிரான்ஸ்), கோகுலன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், மதீரா (பிரான்ஸ்), சிவஸ்னா (பிரான்ஸ்), சஞ்சித் (பிரான்ஸ்), லயானா (பிரான்ஸ்), கிஷாரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.04.2025) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிள்ளையான்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குட்டியப்புலம்
வயாவிளான்.

(CS/57948) K-1

தகவல் : குடும்பத்தினர்
077 923 5978
077 899 5775

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
12 • 06 • 1929



மறைவு
09 • 04 • 2025

# ஆறுமுகம் கனகரத்தினம்

**(நாரந்தனை தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் - பண்டாரபுலம் ஆலயத்தினை ஆரம்ப காலத்தில் விளக்கேற்றி ஆதரித்தவர், சுதா வெதுப்பக உரிமையாளர் - வேலணை)**

நாரந்தனை வடக்கு ஊர்காவற்றுறையை பிறப்பிடமாகவும் கந்தர்மடம் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கனகரத்தினம் (நாரந்தனை தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் பண்டாரபுலம் ஆலயத்தினை ஆரம்ப காலத்தில் விளக்கேற்றி ஆதரித்தவர், சுதா வெதுப்பக உரிமையாளர் வேலணை) அவர்கள் நேற்று முன்தினம் (09.04.2025) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சிவகாமிபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - தையல்முத்து தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தவமணி அவர்களின் அன்பு கணவரும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு, கிருஷ்ணபிள்ளை, பார்வதிப்பிள்ளை, கமலாம்பிகை அவர்களின் அன்புச்சகோதரரும், காலஞ்சென்றவர்களான சிவஞானம், வாடாமலர் .தங்கராஜா மற்றும் சற்குணம் (இலங்கை), சாந்தலிங்கம் (லண்டன்), பரஞ்ஜோதி (லண்டன்), அருந்ததி (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜெகதீஸ்வரி (இலங்கை), மிழலேஸ்வரி (கனடா), யோகேஸ்வரி (லண்டன்), தட்சணேஸ்வரி (இலங்கை), ஞானமூர்த்தி (லண்டன்), தவனேஸ்வரி (சுவிஸ்), பாலமூர்த்தி (பிரான்ஸ்), தேவமூர்த்தி (இலங்கை), ராமமூர்த்தி (கனடா), தட்சணாமூர்த்தி (இலங்கை), )வனிதா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தனபாலசிங்கம் (லண்டன்), அன்னலிங்கம் (கனடா) காலஞ்சென்ற சிவராஜா (லண்டன்) மற்றும் ஜெயபாலன் (கனடா) சீதா (லண்டன்), விநாயகமூர்த்தி (சுவிஸ்), பிறீமிலா (பிரான்ஸ்) தனஜா (கனடா) மோகனாம்பாள் (இலங்கை) சிவனேந்திரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனரும், தர்ஷன் - முகுந்தினி, காலஞ்சென்ற நிரோஷன் - தர்ஷி, நிரஞ்சன் - ஜெயந்தி, லக்ஷனா - பிரதீபன், தன்னியா - சஜீவ், ரொஷான், டஷிஜா - விக்னேஸ், டெபிஜா, மயூரன் - இஷா, மயூரி, ரிஷா, தனுஷ்கரன், சாகித்தியா, சுவீதா - அசுடோஸ்சர்மா, சுவீதன், அர்ஜீதன், பிரவீன், தஜிக்கா, லக்ஷ்னா, லுசான், பபிதா, ஜிலுக்ஷனா - விசோபன், டினேஸ், லாவணியா, சஞ்ஜீவன், இஷா, ரிஷிக்கா ஆகியோரின் அன்புப் பேரனும், ரக்ஷனா, யுடேஸ், டினுஷ்க்கா, ஜோகித், கஸ்வின், சஞ்சனா, பவிசனா, தவிசனா, சிவலட்சுமி, சிவபூமி, சிவவேலன், சன்விகா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (13.04.2025) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இல. 74/25, ஆத்திசூடி வீதி,**
**கந்தர்மடம்,**
**யாழ்ப்பாணம்**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
077 953 8963

(CS/57952) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரதமரின் வருகையால் உயிர்பெற்றன வீதிகள்!

யாழ்ப்பாணம், ஏப். 12

பிரதமர் ஹரிணியின் வருகையை முன்னிட்டு, காரைநகர் வீதிகளில் இருந்த பள்ளங்களும், குழிகளும் அவசரஅவசரமாக மூடப்பட்டன.

யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த பிரதமர் ஹரிணி, நேற்றுக் காரைநகருக்குப் பயணம் மேற்கொண்டார். இதையடுத்தே, காரைநகரில் அவசர அவசரமாக வீதிக்குழிகளைத் தாரிட்டு வீதி அபிவிருத்தி அதிகாரசபை மறைத்துள்ளது.

இதேவீதியால்தான், நோயாளர்களும், கர்ப்பிணிகளும், மாணவர்களும் இத்தனை காலமாகப் பயணம் மேற்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ம-66)

# போருக்கு முழுக்காரணம் சிங்களத் தலைவர்களே!

## கடற்றொழில் அமைச்சர் நாடாளுமன்றில் விளாசல்



கொழும்பு, ஏப். 12

**வடக்கு இளைஞர்களுக்கு ஜனநாயகம் மீதிருந்த நம்பிக்கையை இல்லாமற் செய்து, அவர்கள் ஆயுதம் ஏந்துவதற்கு தெற்குத் தலைவர்களே காரணமாக இருந்தனர் என்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற பட்டலந்த வதைமுகாம் தொடர்பான விவாதத்தில் நேற்றுமுன்தினம் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'1983ஆம் ஆண்டு ஜூலைக் கலவரத்தை அடிப்படையாகக்கொண்டு 1983ஆம் ஆண்டு எமது கட்சி தடை செய்யப்பட்டது. அன்று ஏற்பட்ட கறுப்பு ஜூலையென்பது இன்றளவிலும் கறுப்புப் புள்ளியாகவே தொடர்கின்றது. கட்சிமீதான தடையை நீக்குமாறு ஜனாதிபதி முதல் பலரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. ஐக்கிய நாடுகள் சபைவரையும் சென்றோம். எதுவும் நடக்கவில்லை. மறுபுறத்தில் அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டு எமது உறுப்பினர்கள் கொன்றொழிக்கப்பட்டனர். நாட்டைக் காட்டிக்கொடுக்கின்ற, நாசமாக்குகின்ற ஒப்பந்தங்கள் கைச்சாத்திட்டப்பட்ட வேளை அதற்கு எதிராகவே 1987ஆம் ஆண்டிலும், 1989ஆம் ஆண்டிலும் எமது தோழர்கள் கிளர்ந்தெழுந்தனர். அவர்களும் கொன்று புதைக்கப்பட் டனர். இவ்வாறு புதைக்கப்பட்டவர் கள் விதைக்கப்பட்டவர்களாக மீண்டெழுந்திருக்கின்றார்கள்.

யாழ். நூலகம் எரிக்கப்பட்டு ஆயிரக்கணக்கான நூல்கள் எரிக்கப்பட்ட தன் பின்னணியில் ரணில் விக்கிரமசிங்க இருக்கவில்லையா? 83 ஆம் ஆண்டு கலவரத்தின் பின்னணியில் ஐக்கிய தேசியக் கட்சி இருக்கவில்லையா? ஒவ்வொரு பிரதேசத்திலும் வதை முகாம்கள் இருந்தன. வடக்கு இளைஞர்களுக்கு ஜனநாயகம் மீதிருந்த நம்பிக்கைக்கு வேட்டு வைத்ததும் இவர்கள் தான். அதன்விளைவாகவே நாட்டில் போர் ஏற்பட்டது- என்றார்.

(ம-44)

# அரசாங்க அறிவித்தல்
## பகிரங்க ஏல விற்பனை
## மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் மற்றும் கீழ்க்குறிப்பிடப்படும் பிரதேச செயலகங்களின் அலுவலகப் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட தளபாடங்கள், வளிபதனாக்கிகள், கணினிகள், பிரிண்டர்கள், ரயர்கள், மின்சார உபகரணங்கள், கட்டடங்களிலிருந்து அகற்றப்பட்ட பொருட்கள் என்பன பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

ஏல விற்பனையில் பொருட்களைக் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் நாவற்குழி அரச களஞ்சியசாலை மற்றும் உரிய அலுவலகங்களில் ஏல விற்பனை நடைபெறும் நாளுக்கு முதல் வேலை நாளில் மு.ப 09.00 மணிமுதல் பி.ப 01.00 மணிவரை பொருட்களைப் பார்வையிடலாம். ஏல விற்பனையில் பொருட்களைப் பெறுகின்றவர்கள் உடனடியாக முழுப்பணத்தினையும் ஏல விற்பனைக்குரிய காசாளரிடம் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் (பொது172) பெற்று அன்றைய தினம் மாலை 04.00 மணிக்கு முன்னர் பொருட்களை அவ்விடத்திலிருந்து அகற்றுதல் வேண்டும்.

வருடாந்த ஏல விற்பனை-2025

| இல | அலுவலகம் | ஏல விற்பனை நடைபெறவுள்ள திகதி | நேரம் | ஏல விற்பனை நடைபெறவுள்ள இடம் |
|---|---|---|---|---|
| 1 | பிரதேச செயலகம் பருத்தித்துறை | 21.04.2025 (திங்கட்கிழமை) | மு.ப 09.30 | பி.செ பருத்தித்துறை |
| 2 | பிரதேச செயலகம் கரவெட்டி | 21.04.2025 (திங்கட்கிழமை) | மு.ப 11.00 | பி.செ கரவெட்டி |
| 3 | பிரதேச செயலகம் தெல்லிப்பளை | 22.04.2025 (செவ்வாய்க்கிழமை) | மு.ப 09.30 | பி.செ தெல்லிப்பளை |
| 4 | பிரதேச செயலகம் உடுவில் | 22.04.2025 (செவ்வாய்க்கிழமை) | மு.ப 11.00 | பி.செ உடுவில் |
| 5 | பிரதேச செயலகம் நெடுந்தீவு | 22.04.2025 (செவ்வாய்க்கிழமை) | மு.ப 10.30 | பி.செ நெடுந்தீவு |
| 6 | பிரதேச செயலகம் காரைநகர் | 23.04.2025 (புதன் கிழமை) | மு.ப 09.30 | பி.செ காரைநகர் |
| 7 | பிரதேச செயலகம் சங்கானை | 23.04.2025 (புதன் கிழமை) | மு.ப 10.30 | பி.செ சங்கானை |
| 8 | பிரதேச செயலகம் சண்டிலிப்பாய் | 23.04.2025 (புதன் கிழமை) | மு.ப 11.30 | பி.செ சண்டிலிப்பாய் |
| 9 | பிரதேச செயலகம் வேலணை | 24.04.2025 (வியாழக் கிழமை) | மு.ப 09.30 | பி.செ வேலணை |
| 10 | பிரதேச செயலகம் ஊர்காவற்றுறை | 24.04.2025 (வியாழக் கிழமை) | மு.ப 11.00 | பி.செ ஊர்காவற்றுறை |
| 11 | பிரதேச செயலகம் மருதங்கேணி | 25.04.2025 (வெள்ளிக் கிழமை) | மு.ப 09.30 | பி.செ மருதங்கேணி |
| 12 | பிரதேச செயலகம் சாவகச்சேரி | 25.04.2025 (வெள்ளிக் கிழமை) | மு.ப 11.30 | பி.செ சாவகச்சேரி |
| 13 | பிரதேச செயலகம் யாழ்ப்பாணம் | 28.04.2025 (திங்கட்கிழமை) | மு.ப 09.30 | பி.செ யாழ்ப்பாணம் |
| 14 | பிரதேச செயலகம் கோப்பாய் | 28.04.2025 (திங்கட்கிழமை) | மு.ப 10..30 | பி.செ கோப்பாய் |
| 15 | பிரதேச செயலகம் நல்லூர் | 28.04.2025 (திங்கட்கிழமை) | மு.ப 11.30 | பி.செ நல்லூர் |
| 16 | மாவட்டச் செயலகம்- யாழ்ப்பாணம் | 29.04.2025 (செவ்வாய்க்கிழமை) | மு.ப 09.30 | நாவற்குழி அரச களஞ்சியசாலை |

**ம.பிரதீபன்**
**அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர் (பதில்)**
**யாழ் மாவட்டம்**

(CR/024) J-1

# வவுனியாவில்
# சங்கிலி அறுத்த சிப்பாய் கைது!



வவுனியா, ஏப்.12

வீதியில் செல்லும் பெண்களின் சங்கிலிகளை அறுத்த குற்றச்சாட்டில் சிப்பாய் ஒருவர் வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வவுனியாவின் பல்வேறு பகுதிகளில் தொடர்ச்சியாக நடைபெறும் சங்கிலி அறுப்புச் சம்பவங்கள் தொடர்பாக வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விஜய சோமமுனியின் அறிவுறுத்தலின் படி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். மோட்டார் சைக்கிள் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

வவுனியாவில் பணியாற்றும் இந்த இராணுவச் சிப்பாய் கடமையில் இல்லாத சந்தர்ப்பங்களில் சங்கிலி அறுப்பில் ஈடுபட்டமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது. கடந்த டிசெம்பர் மாதம் 20ஆம் திகதி ஓமந்தையில் பெண் ஒருவரின் ஒரு பவுண் சங்கிலி, கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி வேம்பங்குளத்தில் பெண் ஒருவரின் 2 பவுண் சங்கிலி, கடந்த 31ஆம் திகதி கூமாங்குளத்தில் பெண் ஒருவரின் ஒரு பவுண் சங்கிலி, கடந்த முதலாம் திகதி நெளுங்குளத்தில் பெண் ஒருவரின் சங்கிலி, இராசேந்திரபுரத்தில் பெண் ஒருவரின் ஒரு பவுண் சங்கிலி அறுக்கப்பட்ட சம்பவங்களில் சந்தேககநபர் தொடர்புபட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அறுக்கப்பட்ட சங்கிலிகள் அடைவுவைக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சங்கிலி அறுப்புக்கு சிப்பாய் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளும் மீட்கப்பட்டுள்ளது. சந்தேகநபர் மிகிந்தலையைச் சேர்ந்த 30 வயதுடையவர் என்றும், விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

(எ-110,18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18 உள்ளூராட்சி மன்றங்களின் வேட்புமனுக்களை ஏற்கவும்!

## மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு



**கொழும்பு, ஏப்.12**
**எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட கொழும்பு மாநகரசபை உட்பட 18 உள்ளூராட்சி மன்றங்களுக்கு விதிக்கப்பட்ட இடைக்காலத்தடை உத்தரவை நீக்கி மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.**

அதற்கமைய குறித்த உள்ளூராட்சி மன்றங்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்ட வேட்புமனுகளை மீண்டும் ஏற்றுக்கொள்ளுமாறு நீதி மன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

சட்டமா அதிபரால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையை பரிசீலித்த பின்னர், மேன்முறையீட்டு நீதிமன்றத் தின் பதில் தலைவர் மொஹமட் லபார் தாஹிர் மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதி மன்ற நீதியரசர்கள் குழாம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. (ச-இ)

# தங்கம் விலை சடுதி உயர்வு

கொழும்பு, ஏப்.12
அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையிலான வர்த்தகப்போர் வலுவடைந்துவரும் நிலையில், சர்வதேச சந்தையில் தங்கத்தின் விலை வரலாறு காணாத அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.
நிதிச் சந்தையில் ஏற்பட்டுள்ள ஸ்திரநிலையற்ற தன்மையை அடுத்து முதலீட்டாளர்கள் பாதுகாப்பான சொத்துகளை நோக்கி நகர்வதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-இ)

# போராட்டம் நடத்தியதற்காக பகையுடன் இருக்கமுடியாது!

## ரில்வின் சில்வா தெரிவிப்பு



கொழும்பு, ஏப்.12
நாட்டைப் பாதுகாக்கவே பல சந்தர்ப்பங்களில் போராட்டங்களை மேற்கொண்டோம். தற்போது இந்தியா மட்டுமல்ல முழு உலகமும் மாறிவிட்டது. போராட்டம் செய்தோம் என்பதற்காகத் தற்போது பகையுடன் இருக்கவேண்டுமா?
இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
நாம் நாட்டைக் காட்டிக்கொடுக்கவில்லை. இந்தியாவுக்கு நாட்டைக் காட்டிக்கொடுக்கும் உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளது என்று கூறுபவர்கள் அதை வெளிப்படுத்தவேண்டும்.
நாம் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தங்களால் இலங்கை மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளும் பயனடைகின்றன. இலங்கையின் வரலாற்றில் அதிக சர்வதேச நாடுகளின் ஆதரவைப் பெற்ற அரசாங்கமாகவே தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இடம்பிடித்துள்ளது.
பிரச்சினைகள் ஏற்பட்டபோது போராட்டம் நடத்தினோம். அன்று நாம் சர்வதேசத்துடன் பொருந்தவில்லை என்றனர். தற்போது நாட்டைக் காட்டிக் கொடுக்கின்றோம் என்று கூறுகின்றனர். அவர்கள் வங்குரோத்து நிலைமையின் உச்சத்துக்குச் சென்றுள்ளனர்- என்றார். (எ-இ)



# 22 இந்தியர்கள் கைது

கொழும்பு, ஏப்.12
காலாவதியான விசாக்களுடன் ராஜகிரியவில் உள்ள ஓர் அலுவலக வளாகத்தில் பணிபுரிந்த 22 இந்தியர்கள், குடிவரவு அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
குடிவரவு மற்றும் குடியகல்வுத் துறையின்படி, இந்த இந்தியர்கள், நாடுகடத்தப்படும்வரை வெலிசரத் தடுப்பு மையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.
25 முதல் 35 வயதுக்குட்பட்ட இந்தியர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ச-இ)

# முழுநிலா நாள் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப்.12
உரும்பிராய் ஞானவைரவ கோயிலடி சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில், முழுநிலா நாள் கருத்தரங்கு, சனசமூக நிலைய மேல் மண்டபத்தில் இன்று சனிக்கிழமை பி.ப 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது. நிலையத்தின் தலைவர் இரா.ஜெயக்குமார் தலைமையில் நடைபெறவுள்ள கரத்தரங்கில் யாழ். பிராந்தி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பொ.சிறீவர்ணன் கருத்துரை வழங்குவார். நிகழ்வுக்கு உரும்பிராய் விவேகானந்தா அக்[illegible] அனுசரணை வழங்குகிறது. (25)

## விண்ணக வாழ்வின் 31ம் நாள் நினைவு

மழலையாய் 12 . 04 . 1960

மகிமையாய் 13 . 04 . 2025



**சந்திரவதனா பூவிலிங்கம்**
(முகாமைத்துவ உதவியாளர் M.A
யாழ் பனை அபிவிருத்திச் சபை)

சந்திரவதனாசரித்திரத்தின் நாயகி நீ
உன் அழகான சிரிப்பையும்
உன் ஆறுதலான முத்தத்தையும்
என்று மறப்பேன் நான்
என்னுடன் வா அக்கா இருக்கிறதுக்கு
ஏக்கத்தோடு தவிக்கிறேன் நான் அக்கா
முடியவிலை உன் இழப்பை
முயன்ற வரை தேடுகின்றேன்
உன் வடிவான வதனத்தை
உன் வருடலும் என் தேடலும்
என் தேவனே ஒரு தரம் அல்ல
ஓராயிரம் தடவை கிடைக்க வேண்டுகிறேன்
என் அப்பா இயேசுவிடன்
என் கைக்குள் நீ மட்டும்
உன் மனதில் நான் மட்டும்
கண்ணுக்குள் கண்ணீர் இல்லை-அக்கா
என் கண்ணுக்குள் நீ மட்டும் இருப்பதினால்
ஆழமான பாசத்தை அழிக்கவும் முடியாது
இழக்கவும் முடியாது
எப்போதும் என் இதயத்தில்
குடி கொள்வாய் என் உயிர் அக்கா.


85 சப்பல் வீதி.

ஜெயவதனி பூவிலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
06 . 04 . 1944



மறைவு
25 . 03 . 2024

## வயித்திலிங்கம் மருதலிங்கம்

**ஓய்வு பெற்ற தபால் அதிபர், சமாதான நீதிவான் (J.P) முன்னைநாள் கும்பழாவளை செயலகப் பொறுப்பாளர் நீண்டகால சைவவாலிப சங்க செயலாளர் அளவெட்டி மத்தி மூத்த பிரஜைகள் சங்கத் தலைவர், ஆலயங்களில் ஒதுவார் கும்பழாவளை தொண்டர் சபையினரின் ஆலோசகர்**

அளவையை அலங்கரித்த ஆயிரம் பிறையாளன் ஆன்மீகம் பெருக்கி பெருந்துறையாளர். மளமளவென புராண திருமுறைகள் ஓதவல்லார் மாருதப்புரவீகப் போற்றும் மருதலிங்கமானார் களம்பல கண்டதனால் தபாலதிபர் பணிநின்றார். காந்திரமான சமயசமூக சேவையில் பூத்திருந்தார் குளம் என நிரப்பிய அறிவுக்களஞ்சியமானார். கும்பழாவனையானைப் பேசவைத்த மருகலிங்கமானர்

கும்பழாவளை
அளவெட்டி

**குடும்பத்தினர்.**

(CS 632) V-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
03 . 02 . 1949



மறைவு
09 . 04 . 2025

## செல்வி நாகேசு சுதந்திராதேவி JP, B.A

**(ஓய்வுநிலை வீடமைப்புத் திணைக்கள அதிகாரி, முன்னாள் பொருளாளர் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய அறங்காவலர் சபை, முன்னாள் செயலாளர் தம்பகைப்பதி வீரபத்திரர் சுவாமி ஆலய அறங்காவலர் சபை)**

நயினாதீவு 3ஆம் வட்டாரத்தினைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி நாகேசு சுதந்திராதேவி அவர்கள் கடந்த 09.04.2025 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகேசு-நாகரெத்தினம் தம்பதியின் மூத்த மகளும், காலஞ்சென்ற சிவராசசிங்கம் (முன்னாள் அறங்காவலர் சபைத் தலைவர் நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில்), வசந்தாதேவி, சவுந்திராதேவி (கனடா), ஜெகராசசிங்கம் (சட்டத்தரணி முன்னாள் விரிவுரையாளர் கொழும்பு பல்கலைக்கழகம்-அவுஸ்ரேலியா), ஜெயராசசிங்கம் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஏகநாயகவல்லி( ஓய்வு நிலை ஆசிரியை-கனடா), தனபாலசிங்கம் (தலைவர்-தனியார் படகு உரிமையாளர் சங்கம்-நயினாதீவு) தவகுகதாசலிங்கம் (கனடா), கிசானி (அவுஸ்ரேலியா), உதயராணி (கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.04.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
சி.ஏகநாயகவல்லி- 006 473 422249
சி.தனபாலசிங்கம் - 077 437 3760
த.தவகுகதாசலிங்கம்- 006 475 003421
நா.ஜெகராசசிங்கம் } 001 626 87947
நா.ஜெயராசசிங்கம் }

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
நாகேசவான்
நயினாதீவு 03

# பொலிஸார் துப்பாக்கிச்சூடு; இளைஞன் படுகாயம்

கொழும்பு, ஏப்.12

கொழும்பு புறநகர்ப் பகுதியான கிரிபத்கொட கால சந்திப் பகுதியில் நேற்றுமுன்தினம் காலை பொலிஸார் நடத்திய துப்பாக்கிச்சூட் டில் ஒருவர் காயமடைந்து மருத்துவம னையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பொலிஸாரின் உத்தரவுகளைப் பின்பற்றாமல் சென்ற மோட்டார் சைக்கிளின் மீதே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. (ச-சி)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## கேள்வி அறிவித்தல்

கீழ்க்காணும் உணவகங்களை நடாத்துவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி அறிவியல்நகர் வளாகத்தில் அமைந்துள்ள பிரதிப் பதிவாளர் பணிமனையில் பிரதிப்பதிவாளர்/ கிளிநொச்சி பொது நிர்வாகக் கிளை அவர்களால் 23.04.2025 ஆம் திகதி மு.ப 10.00 மணிவரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும

| | |
|---|---|
| பொறியியற் பீட உணவகம் | அறிவியல்நகர், கிளிநொச்சி |
| தொழிலநுட்ப பீட உணவகம் | அறிவியல்நகர், கிளிநொச்சி |
| விவசாய பீட உணவகம் | அறிவியல்நகர், கிளிநொச்சி |
| விவசாய பீட புதிய உணவகம் (Juice Canteen) | அறிவியல்நகர், கிளிநொச்சி |
| ஆண்கள் மாணவர் விடுதி உணவகம் | அறிவியல்நகர், கிளிநொச்சி |
| பெண்கள் மாணவர் விடுதி உணவகம் | அறிவியல்நகர், கிளிநொச்சி |

மீளளிக்கப்படும் கேள்விவைப்பு பணமாக ரூபா 2000ஃஸ்ரீஇனை மக்கள் வங்கியிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கு இலக்கம் 97000060000268 இற்கும், மீளளிக்கப் படாத கட்டணம் ரூபா 500/ ஸ்ரீஇனை தனித்தனியாக மக்கள் வங்கியிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கு இலக்கம் 97000060000276 இற்கும் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டுகளினை சமர்ப்பித்து கேள்விப் படிவங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளநொச்சி வளாக பொது நிர்வாக கிளையில் பெற்றுக்கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் உணவகத்தின் பெயர் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.


மேலதிக விபரங்களுக்கு அலுவலக நேரங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக பொது நிர்வாகக் கிளை (தொலைபேசி இல 0212060180) மூலம் நேரடியாகவோ அல்லது தொலைபேசி ஊடாகவோ தொடர்பு கொள்ளவும்.

**பதிவாளர்**

(CR/0023) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
22 . 05 . 1948



மறைவு
11 . 04 . 2025

## கார்த்திகேசு யோகராஜா
(முன்னைநாள் உத்தியோகத்தர்- யாழ் மாநகரசபை/ Oceanick Impex)

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், ஆவரங்கால், கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு யோகராஜா அவர்கள் நேற்று (11.04.2025) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு-நாகமுத்து தம்பதியின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான முத்துகுமாரு-சிவபாக்கியம் தம்பதியின் அன்பு மருமகனும் பத்மாவதி அவர்களின் பாசமிகு கணவரும், Dr.பத்மயோகனின் (தேசிய பல் வைத்தியசாலை, கொழும்பு) பாசமிகு தந்தையும் தர்ஷனாவின் அன்பு மாமனாரும் சுவேஷனா, டிர்வின் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான லோகசுந்தரம், தங்கபூரணம், சோமசுந்தரம், விஜயசுந்தரம், உருத்திரசுந்தரம், தியாகராஜா, சௌந்தரம் மற்றும் சோமசேகரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற மங்களேஸ்வரியம்மா மற்றும் பத்மநாதன் (UK) அவர்களின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பார்வைக்காக நாளை (13.04.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணி முதல் கல்கிசை மஹிந்த மலர் சாலையில் வைக்கப்பட்டு இறுதிக்கிரியை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கல்கிசை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

46 1/1 I.B.C Road,
வெள்ளவத்தை.
011 255 9772
077 154 7116

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தளம்பலடையும்...

சர்வதேச நாணயநிதியத்தின் மூத்த உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்று, அண்மையில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டு பல்வேறுபட்ட ஆய்வுகளையும், கண்காணிப்புகளையும் முன்னெடுத்தது. இந்தப் பயணம் தொடர்பில் வெளியிட்டுள்ள சிறப்பு அறிக்கையிலேயே, இலங்கையில் நிச்சயமற்ற நிலை உருவாகிவருவதாக நாணயநிதியத்தின் குழு எச்சரிக்கை விடுத்துள்ளது.

உலகளாவிய நெருக்கடிகளால் இலங்கையில் நிச்சயமற்ற நிலை ஏற்படும் என்பது உறுதியானது. ஆனால், அதன் பாரதூரத்தன்மை தொடர்பில் ஆய்வுப் பணிகளை முன்னெடுப்பதற்கு இன்னும் கூடுதலான கால அவகாசம் தேவை. ஆதலால், இந்த விடயத்தில் நாங்கள் கூடுதல் அவதானம் செலுத்தியுள்ளோம் என்றும் நாணயநிதியத்தின் குழு கூறியுள்ளது.

அமெரிக்க அதிபர் ட்ரம்பின் வரி விதிப்பு, ஐரோப்பிய ஒன்றியத்தின் சலுகைகள் நீக்கப்படும் அபாயம் என்பன இலங்கையைச் சூழ்ந்துள்ள நிலையிலேயே இந்தக் கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

## ஏப்ரல்...

தகவல்கள் வெளியாகியுள்ளன. அவ்வாறு இதுவரை எந்தத் தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை. அடுத்தவாரம் 'பெரியவெள்ளி'தினமும் விடுமுறையாக உள்ளது. எனவே, 15ஆம் திகதியையும் விடுமுறையாக அறிவிக்கும் எண்ணம் இதுவரை எமக்கு இல்லை - என்றார். (அ-ம-44)

## ஊழல்...

ஊவா மாகாண முதலமைச்சராக சாமர சம்பத் கடமையாற்றியபோது, பாடசாலை மாணவர்களுக்கு புத்தகப்பை வழங்குவதற்காக மாகாண சபை ஊடாக 10 இலட்சம் ரூபாவை மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில், முன்னாள் ஜனாதிபதி ரணில் பல விடயங்களை அறிந்துவைத்துள்ளார் என்று இதுவரையான விசாரணைகளின் அடிப்படையில் தெரியவந்துள்ளது. இதையடுத்தே, எதிர்வரும் 17ஆம் திகதியன்று இது தொடர்பான விசாரணைகளுக்காக முன்னிலையாகுமாறு ரணிலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் விசாரணைகளுக்காக அழைக்கப்பட்டமையை ரணில் உறுதிப்படுத்தியுள்ளார். அத்துடன், 'இந்த விசாரணைகளுக்காக முன்னிலையாகுவேன்' என்றும் அவர் கூறியுள்ளார். (அ-ம-இ)

## விபத்தில்...

ஏறியுள்ளது. இதையடுத்து அந்த மூதாட்டி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

33 வயதுடைய டிப்பர் சாரதி கோப்பாய் போக்குவரத்துப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிரேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## மாவிட்டபுரம் கோயிலில்...

அரசாங்கத்தின் நிகழ்வும் அல்ல. நாங்கள் வந்திருப்பது ஆலயத்துக்கு. 50 ஆண்டுகளுக்குப் பின்னர் இடம்பெறும் விழாவில் இவ்வாறான இடையூறுகளை ஏற்படுத்தவேண்டாம்' என்று பிரதமரின் பாதுகாப்புப் பிரதானிகளுடன் பொதுமக்கள் முரண்பட்டனர். இதையடுத்து பாதுகாப்பு சிறிது தளர்த்தப்பட்டது. (அ-ம-26)

## தூய்மையான...

எமக்கு ஒரு வளமான வரலாறு உண்டு. கரைநகர் தொடர்பில் எனக்குக் கிடைத்த தகவல்களால் நான் மிகவும் நெகிழ்ச்சியடைந்தேன். 1977ஆம் ஆண்டில், காரைநகரில் சுமார் 80 ஆயிரம் பேர் வசித்தனர். ஆனால் துரதிஷ்டவசமாக, இன்று 10 ஆயிரத்து 500 பேர் மட்டுமே உள்ளனர். மீதமுள்ளவர்களுக்கு என்ன ஆனது? அவ்வாறே வடமாகாணத்தில் வசதி படைத்தவர்களும் படித்தவர்களும் காரைநகரில் வசிக்கிறார்கள் என்றும் நான் அறிந்தேன். அது எனக்கு மிகவும் வியப்பாக இருந்தது. ஆனால் பிரச்சினை என்னவென்றால், அவர்கள் கற்கவும், செல்வந்தர்களாகவும், ஏதாவது வேலை செய்யவும் கரைநகரை விட்டு வெளியேறவேண்டியிருந்தது.

அவ்வாறு செல்லமுடியாமல் போனவர்களைப் பற்றி யார் பேசுவது? அவர்கள் எமது நாட்டின் குடிமக்கள். ஏனைய அனைவரையும் போலவே அவர்களுக்கும் சம உரிமைகள் இருக்கவேண்டும். கல்வி அமைச்சர் என்ற முறையில் காரைநகரில் கல்விநிலை குறித்து கேட்டறிந்தேன். அதன்போது, உயர்தரக் கல்வியை வழங்கும் இரண்டே இரண்டு பாடசாலைகள்தான் உள்ளன என்பதை அறிந்தேன். இரண்டு ஆசிரியர்கள் மட்டுமே உள்ளனர். மேலும், ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் அனைத்துப் பிள்ளைகளும் காரைநகரை விட்டு வெளியேறி மேலதிக கல்விக்காக யாழ்ப்பாணம் செல்கின்றனர்.

இதுவரை, இந்த நாட்டில் அரசாங்கங்கள் இருந்தன, ஜனாதிபதிகள் இருந்திருக்கிறார்கள், தேசிய அரசாங்கங்கள் இருந்தன, இந்தப் பகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்திருக்கிறார்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள் இருந்தன, மாகாண அரசாங்கங்கள் இருந்தன. ஆனால் காரைநகர் மக்களின் கல்வியை மேம்படுத்த அவர்கள் என்ன செய்திருக்கிறார்கள்?

கல்வி மூலமே மக்களின் பெறுமானங்கள் அதிகரிக்கின்றன, ஆனால் இந்தப் பிரதேசம் பல தசாப்தங்களாக தரமான கல்விக்கான உரிமையை இழந்துள்ளது. மேலும், இந்தப் பகுதியில் தண்ணீர்ப் பிரச்சினையும் உள்ளது. பிரதேச மட்டத்தில் வீதிகள், போக்குவரத்து உள்ளிட்ட பல விடயங்கள் ஊழல் காரணமாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளன. போர் முடிந்து 16 ஆண்டுகள் ஆகின்றன, அன்றும் இன்றும் என்ன வித்தியாசம் ஏற்பட்டுள்ளது? ஏன் இந்தப் பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படவில்லை? இதனால்தான் உள்ளூராட்சித் தேர்தல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. பிரதேச மட்டத்தில் உள்ள பிரச்சினைகள் உள்ளூராட்சி நிறுவனங்களால் தீர்க்கப்படவேண்டிய பிரச்சினைகள்.

சுமார் ஒரு மாதத்துக்கு முன்னர் எமது அரசாங்கத்தின் முதலாவது வரவுசெலவுத் திட்டத்தை நாங்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றினோம். அதன்மூலம் கல்வி, சுகாதாரம், பொதுமக்கள் நலன், உட்கட்டமைப்பு, போக்குவரத்து போன்ற அனைத்திற்கும் அனைத்து உள்ளூராட்சிக் கணக்குகளுக்கும் அதிக அளவு பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் அந்தப் பணத்தை விவேகத்துடன் செலவிடவேண்டும். அதற்கு, ஊழல் இல்லாத தூய்மையான நிர்வாகம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு தேவை. எனவே, இந்தத் தேர்தலில், ஊழல் மற்றும் மோசடி இல்லாத மக்களுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் ஒரு குழுவை நீங்கள் தேர்ந்தெடுக்கவேண்டும்-என்றார். (அ-ம-இ)

## மாவிட்டபுரம்...

யில் கும்பாபிஷேகம் இடம்பெற்றது. இதில், தமிழ்நாட்டின் புகழ்பெற்ற தீட்சிதர்கள், இலங்கையின் பல்வேறு இடங்களிலிருந்து வருகைதந்த சிவாச்சாரியார்கள் கலந்துகொண்டு கும்பாபிஷேகக் கிரியை வழிபாடுகளை ஆற்றினார்கள். (அ-ம-66)

## பிரதமர்...

மாவிட்டபுரம் ஸ்ரீகந்தசுவாமி ஆலய மகா கும்பாபிஷேகப் பெருவிழாவைத் தொடர்ந்து, பல்வேறு பரப்புரைக் கூட்டங்களில் பிரதமர் ஹரிணி கலந்துகொண்டார். இவ்வாறு இடம்பெற்ற கூட்டங்களில், நீர்வேலி மற்றும் காரைநகர் பகுதிகளில் இடம்பெற்ற கூட்டங்கள் ஆலயச் சூழல்களில் இடம்பெற்றன என்றும், அவை தேர்தல் விதிமீறல் என்றும் தேர்தல் திணைக்களத்தின் முறைப்பாட்டு முகாமைத்துவப் பிரிவுக்கு ஏனைய கட்சிகளாலும், பொதுமக்களாலும் முறையிடப்பட்டுள்ளது.

இதையடுத்து, தேர்தல் திணைக்கள முறைப்பாட்டு முகாமைத்துவப் பிரிவால், பிரதமர் ஹரிணியின் பரப்புரை இடம்பெறும் பகுதிகளுக்கு (ஆலய நிர்வாகங்களுக்கு), தேர்தல் விதிமீறல்களில் ஈடுபடவேண்டாம் என்று உடனடியாகக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. (அ-ம-26)

## விளையாட்டுப்...

பயிற்சியாளராகவும் செயற்பட்டுவருகின்றார். அவரிடம் பயிற்சிக்காகச் சென்ற சிறுவர்களையே அவர் துஷ்பிரயோகத்துக்கும் துர்நடத்தைக்கும் உட்படுத்தியுள்ளார். அவரால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் 10 தொடக்கம் 13 வயதுடையவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களில் சிலரின் நடத்தைகளில் மாற்றம் ஏற்பட்டதையும், கல்வியில் திடீர் பின்னடைவு ஏற்பட்டதையும் ஆசிரியர்கள் அவதானித்து விசாரணை நடத்தியுள்ளனர். இதன்போதே, இரண்டு சிறுவர்கள் மூலம் இந்த விடயம் வெளியில் தெரியவந்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் பாடசாலை நிர்வாகத்தாலும், சிறுவர் நன்நடத்தை அதிகாரிகளாலும் பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்ட நிலையில், நேற்று இது தொடர்பான வாக்குமூலங்களை பொலிஸார் பதிவுசெய்துள்ளனர்.

சந்தேகநபர் இதுவரை (நேற்று மாலை வரை) கைதுசெய்யப்படவில்லை.

இதற்கு சிறுவர்களின் பெற்றோர் கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளனர். அத்துடன், பாதிக்கப்பட்ட சிறுவர்களை பொலிஸ் வாகனத்தில் ஏற்றிச்செல்வதற்கும் பொலிஸார் முற்பட்டபோது, அதற்கும் பெற்றோர் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட சிறுவர்களின் உளவியலைப் புரிந்துகொண்டு நடக்குமாறு பெற்றோரால் பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டது. (அ-ம-316-213)

## பௌத்த...

முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு, கிழக்கில் குறிப்பாக வடக்கில் தாயகக் கோட்பாட்டை நிராகரிப்பதற்கு இருக்கும் ஒரே சாட்சிதான் பௌத்த சின்னங்கள். அதனால்தான் வடக்கிலுள்ள பிரிவினைவாத அரசியல்வாதிகள் பௌத்த சின்னங்களை அழித்து, அதற்கு மேல் கோவில்களை அமைத்து, அங்கு பழைய கோவில்கள் இருந்தன எனக் கூறிவருகின்றனர்.

இலங்கையென்பது பௌத்த நாடாகும். திஸ்ஸ விகாரையில் திறப்பு விழாவொன்றை நடத்தமுடியவில்லையெனில், தமிழர்கள் கூச்சலிடுகின்றனர் என்பதற்காக பிக்குகளுக்கு தானம் வழங்கமுடியவில்லையெனில் என்ன நியாயம்? தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் புத்தசாசனம் பாதுகாக்கப்படவில்லை என்பதையே இது எடுத்துக்காட்டுகின்றது.

அதேவேளை இலங்கையில் தேசிய கீதம் இரு மொழிகளில் இசைக்கப்படுகின்றது. இது பெரும் தவறாகும். அரசியலமைப்பை மீறும் செயலாகும். இந்தியாவில் எத்தனை மொழிகள் உள்ளன. ஆனால் பங்காளி மொழியில் மட்டுமே தேசிய கீதம் இசைக்கப்படுகின்றது என்றார். (அ-ம-44)

## அமெரிக்க...

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

கண்டியில் நேற்று நடைபெற்ற தேர்தல் பரப்புரையில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'அமெரிக்காவின் வரி விதிப்புக் காரணமாக இலங்கையின் பொருளாதாரத்துக்கு தாக்கம் ஏற்படக்கூடிய அச்சுறுத்தல் உள்ளது. இந்த சவாலுக்கு நாம் முகங்கொடுக்கவேண்டும். உலக நாடுகளில் ஏற்படும் போர் மற்றும் தொற்று நோய்கள் போன்ற காரணங்களால் எந்தநேரத்திலும் பொருளாதாரத்துக்கு தாக்கம் வரக்கூடும். எனவே, எந்தச் சூழ்நிலையையும் தாங்கிக்கொள்ளக்கூடிய வகையிலான பொருளாதாரத்தை நாம் கட்டியெழுப்பவேண்டும்.

இந்தப் பிரச்சினையை தீர்த்துக்கொள்வது தொடர்பில் அமெரிக்க ஜனாதிபதிக்கு நான் தனிப்பட்ட ரீதியில் கடிதம் எழுதியுள்ளேன். அந்தக் கடிதம் கிடைத்தது என்று தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் வரிச் சுனாமியால் இலங்கையின் பொருளாதாரத்துக்கு தாக்கம் ஏற்படாத வகையிலான முடிவுகளை எடுப்பதற்கு முயற்சித்துவருகின்றோம். அந்தச் சுனாமியில் இருந்து தப்பிப்பதற்கு வியூகம் வகுக்கப்படுகின்றது. சிலவேளை சுனாமியில் சிக்கவேண்டியேற்படின் அதற்கு முகங்கொடுப்பதற்கும் திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன - என்றார். (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழல் தடுப்பு அலுவலகம் மன்னாரில் திறப்பு

மன்னார், ஏப். 12
மன்னார் மாவட்டச் செயலகத்தில் இலஞ்சம் ஊழல் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கான அலுவலகம் கடந்த புதன்கிழமை திறந்துவைக்கப்பட்டது. மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் உத்தியோகபூர்வமாக இந்த அலுவலகத்தை ஆரம்பித்து வைத்தார்.

நிகழ்வில் மேலதிக மாவட்டச் செயலர், பிரதம உள்ளக கணக்காய்வாளர், திட்டமிடல் பணிப்பாளர், பதவிநிலை உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ச-213)

## தவறவிடப்பட்டது

Temperory Liciance, Insurance, Tax, Document Book திருநெல்வேலியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு இடைப்பட்ட பகுதியில் தவறவிடப்பட்டது கண்டெடுத்து தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும்

தொடர்பு: 076 072 9360

## வேலையாட்கள் தேவை

புத்தூரில் இயங்கும் அரைக்கும் ஆலை ஒன்றிற்கு அனுபவமான வேலை ஆட்கள் (ஆண்) தேவை

தொடர்பு: 077 373 5261

## பணிப்பெண் தேவை

தெல்லிப்பளையில் அமைந்துள்ள வீடு ஒன்றிற்கு தங்கியிருந்து வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை.

தொடர்புகளுக்கு:
070 600 5029

## காணி விற்பனைக்கு

நீர்வேலி, சிறுப்பிட்டியில் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. ஒரு பரப்பின் விலை 12 இலட்சம்.

தொடர்பு: 077 820 9424 (CS 30006) A

# முதிரைக்குற்றிகள் வவுனியாவில் மீட்பு

வவுனியா, ஏப்.12
வவுனியா பூவரசங்குளம் பகுதியில் சட்டவிரோதமாக கடத்தி செல்லப்பட்ட ஒரு தொகை முதிரைக்குற்றிகள் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளனவென பொலிஸார் தெரிவித்துள்ளார்.

வவுனியா பூவரசங்குளம் பகுதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பூவரசங்குளம் பொலிஸார் வாகனம் ஒன்றை வழிமறித்தபோது குறித்த வாகனம் நிறுத்தாமல் சென்றுள்ளது.

இதனையடுத்து பொலிஸார் அந்த வாகனத்தைத் துரத்திச்சென்றபோது வாகனம் இராசேந்திரன்குளம் பகுதியில் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியது.

வாகனத்தைச் செலுத்திய சாரதி உட்பட்டோர் அங்கிருந்து தப்பிச் சென்ற நிலையிலேயே ஐந்து இலட்சம் பெறுமதியான முதிரை மரக்குற்றிகள் மீட்கப்பட்டுள்ளன. தப்பிச் சென்றவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கையைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-22,110)



# கிளிநொச்சி சென்ற சனத் ஜெயசூரியா

கிளிநொச்சி, ஏப். 12
இலங்கைத் துடுப்பாட்ட அணியின் முன்னாள் வீரரும் தற்போதைய தலைமை பயிற்றுநருமான சனத் ஜெயசூரியா கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்துக்கு நேற்று விஜயம் மேற்கொண்டு மைதானத்தைப் பார்வையிட்டார்.

குறித்த மைதானத்தை புற்தரை மைதானமாக மாற்றி கிளிநொச்சி மாவட்டத்தின் துடுப்பாட்டத்துறையை வளர்க்கும் நோக்குடன் மைதானத்தைப் பார்வையிட்டதாகத் தெரிவித்தார்.

பாடசாலையின் முதல்வர் சவரி பூலோகராஜா மற்றும் கிளிநொச்சி மாவட்டத் துடுப்பாட்டச்சங்கத்தைச் சேர்ந்தோர் இதன்போது கலந்துகொண்டனர். (ச-113)

# நாத நர்த்தன வர்ணம் நிகழ்வு

தென்மராட்சிக் கல்வி வலயம் நடத்தும் நாத நர்த்தன வர்ணம் நிகழ்வு எதிர்வரும் 16ஆம் திகதி புதன்கிழமை பி.ப 1.30 மணிக்கு சாவகச்சேரி நகராட்சி மன்ற பொன்விழா மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தென்மராட்சிக் கல்வி வலய கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் மு.ஜெகதாசன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக தேசிய கல்வியியற் கல்லூரி நடனத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி சுபாதினி சத்தியேந்திரம்பிள்ளை, சிறப்பு விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய முன்னாள் நடன பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி யசோதரா விவேகானந்தன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-33-159)

# கட்டுத்துவக்கு வெடித்து இளைஞருக்கு காயம்!

முல்லைத்தீவு, ஏப். 12
முல்லைத்தீவில் சட்டவிரோத கட்டுத்துப்பாக்கி வெடித்ததில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்து முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

உடையார்கட்டு குரவில் பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞரே இவ்வாறு படுகாயமடைந்துள்ளார். அவர், புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ம-19)

## விவசாயிகளுக்கு

இந்தியாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட **மழைத்தூறல் பைப் (Rain Hose Pipe)** Brand KSNM 40mm, 50mm இப்பொழுது எம்மிடம். இந்த புதிய தொழில் நுட்பத்திற்கான பாவனை நாடு பூராகவும் பயன்படத்தொடங்கிவிட்டது. எனவே இதை பொருத்தி விவசாயிகளே நல்ல விளைச்சலைப் பெற்றுக்கொள்ளுங்கள். அத்துடன் தூறல் நீர்ப்பாசனத்திற்கான சகல பொருட்களும் எமது நிறுவனத்திலே.

(உங்கள் தேவைக்கேற்ப பொருத்தியும் தரப்படும்)




"நாங்கள் உங்களோடு"
ஆர்க் .என். கம்பனி
- 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
- A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
- A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020

Hotline: 071 535 7799 / 071 535 7803

வரலாற்றுப் பிரசித்திபெற்ற மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருந் திருவிழாவின் கைலாசவாகனத் திருவிழா நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு சிறப்புறவும், பக்திபூர்வமாகவும் நடைபெற்றது. (ச-66)





## Job Vacancy

**SAM ACCOUNTANTS**
**Chartered certified Accounts**
**It's a UK based firm operates in No 504 Navalar road, Jaffna.**
**We are looking to recruit new staffs for our firm.**

No of Vacancies : 2
Designation : Assistant Accounts
Salary : Negotiable

**Working Days & Hours:**
- Monday to Friday
- 12 PM to 9 PM for Male.
- 10 AM to 7 PM for Female.

Educational qualification : BBA, B.Com, HNDA, AAT or
Partly Qualified In : ACCA, CIMA, CA, CMA
Experience : Minimum 2 Years in related field
Communication : Fluency in English (Oral and Written)

Forward your CV before 30th April 2025 to
Recruitersam80@gmail.com

(CS/57947) S-1

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் வடமராட்ச்சி கரவெட்டி அல்வாய் கிழக்கில் 12 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு**

- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் இருவழி பாதையுடன்
- 1 பரப்பின் விலை
- ✓ பிரதான வீதி முகப்புடன் பதினேழு லட்சம் ரூபா (17,000.00)
- ✓ இரண்டாம் காணி பதினைந்து லட்சம் ரூபா (15,000.00)
- ✓ பின் பகுதி காணி எட்டு லட்சம் ரூபா (8,000.00)
- நெல்லியடி பஸ்நிலையம் 2 1/2 KM, பருத்தித்துறை பஸ் நிலையம் 2 KM, மந்திகை ஆஸ்பத்திரி 1 KM பருத்தித்துறை வீதி 600M, மாலு சந்தி 1 KM தூரம்
- கரவெட்டி பிரதேசசபை 1 KM தூரம்
- தம்பசெட்டி மெதடிஸ்த மிசன் வித்தியாலயம் 1 KM தூரம், மாலுசந்தி பிள்ளையார் கோயில் 1 KM தூரம்
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி. செம்மண் தரை நன்னீர் ஊற்று
- தரகர் தேவையில்லை

**(பார்வையிடும் நேரம் காலை 8.00 - மாலை 6.00 வரை)**

தொடர்பு: 076 860 2770 / 076 987 8617 / 076 935 3971

(CS/2926) V-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.04.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org